මධ්‍යම පළාත් සභාවේ අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மத்திய மாகாண சபையின் கல்வித் திணைக்களம்
DEPARTMENT OF EDUCATION - CENTRAL PROVINCE

# ஆண்டிறுதிப் பரீட்சை - 2017

தரம் - 10

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் - I

நேரம்: 1 மணித்தியாலம்

**சகல வினாக்களுக்கும் விடையளிக்க. வினாக்களைக் கவனமாக வாசித்து மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க. கணிப்பான்கள் அனுமதிக்கப்படமாட்டாது.**

80 T I

814

1. தகவலானது ................................ தரவு என அழைக்கப்படும்.
   (1) பெறுமதிமிக்க
   (2) செம்மையான
   (3) முறைவழியாக்கப்பட்ட
   (4) தீர்மானமான

2. பின்வருவனவற்றுள் எது தகவல் ஒன்றின் பண்பினைப் **பாதிப்பதில்லை?**
   (1) பெறுநர்களின் வயது
   (2) கோப்பின் பருமன்
   (3) காலப்பொருத்தம்
   (4) செம்மை

3. உலகின் முதலாவது பொறிமுறைக் **கணிதச் செய்கைகளுக்கான** உபகரணமாக கருதப்படுவது?
   (1) கூட்டற்பொறி
   (2) எண்சட்டம்
   (3) துளைஅட்டை
   (4) MARK I

4. இரண்டாம் பரம்பரைக்கணினிகளின் **அடிப்படையாக** அமைந்தவை,
   (1) மிகப்பேரளவு ஒருங்கிணைப்புச் சுற்றுக்கள்
   (2) திரான்சிற்றர்கள்
   (3) பேரளவு ஒருங்கிணைப்புச் சுற்றுக்கள்
   (4) வெற்றிடக்குழாய்கள்

5. கணினி நிகழ்ச்சித்திட்டங்களை **சேமித்தல்** தொடர்பான எண்ணக்கருவானது.............. என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்டது,
   (1) John Von Neumann
   (2) Charles Babbage
   (3) Ada Lovelace
   (4) Blaise Pascal

6. 123, $567_8$, $1BC_{16}$, $100101_2$ எனும் எண்களை **ஏறுவரிசையில்** தருவது எது?
   (1) 123, $567_8$, $1BC_{16}$, $100101_2$
   (2) $1BC_{16}$, 123, $567_8$, $100101_2$
   (3) $567_8$, 1001012, $1BC_{16}$, 123
   (4) $100101_2$, 123, $567_8$, $1BC_{16}$

7. பதினறும எண்ணான B0A இற்கு சமவலுவான **பதின்ம எண்?**
   (1) 2891 (2) 2826 (3) 2981 (4) 2846

8. எழுத்துரு F இனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ASCII குறியீடு 01000111 எனின், எழுத்துரு S இனைக் **குறிப்பது** யாதாகும்?
   (1) 1010000
   (2) 01101000
   (3) 1011001
   (4) 00101011

9. **307**இனைக் குறித்து நிற்கும் சரியான **BCD குறியீடு?**
   (1) 110000011111
   (2) 001010000101
   (3) 001100000111
   (4) 100110001110

10. பச்சை நிறத்திற்கான நிறக்குறியீடு # **574**F3A எனின் அதன் **துவித எண்** யாதாகும்?
   (1) 01000111
   (2) 00111010
   (3) 00111010
   (4) 01001111

www.Paritchai.com
kalvi.lk
Scanned by CamScanner

11. A எனும் மாணவன் ரூபா 50 இனை தனது தந்தை மற்றும் தாயிடமிருந்து பெற்றுக்கொண்டான். அவன் அத்தொகையினைப் பெற்றுக்கொள்ளும் ஓர் வழிமுறையாக பின்வருவனவற்றுள் எதனைக் **கருதமுடியாது**?

(2) 01010 and 01111
(2) 01100 and 01101
(3) 10111 and 01010
(4) 00101 and 10100


12. 0.031 எனும் எண்ணின் **மிகக் குறைந்த** மற்றும் **மிகக் கூடிய** மதிப்புறு இலக்கங்கள் **முறையே,**

(1) 0 மற்றும் 1
(2) 1 மற்றும் 0
(3) 1 மற்றும் 3
(4) 3 மற்றும் 1

13. பின்வருவனவற்றுள் எது **மிகக்கூடிய** தரவுப் பெறுவழிக் கதியினை உடையதாகும்?

(1) பதுக்கு நினைவகம்
(2) சிமிட்டு நினைவகம்
(3) பதிவேட்டு நினைவகம்
(4) வன்வட்டு

14. அருகிலுள்ள சுற்றில் A=0 மற்றும் B=0 எனின் **வெளியீடு** யாதாகும்?




(1) 1
(2) 0
(3) B
(4) A

15. தரப்பட்ட உண்மை அட்டவணைக்குப் பொருத்தமான **தர்க்கவாயில்** யாதாகும்?

| உள்ளீடு | | வெளியீடு |
|---|---|---|
| **P** | **Q** | **R** |
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 0 |


(1) OR
(2) NOR
(3) AND
(4) NAND

Education கல்வி

16. கற்கைநெறி ஒன்றினைப் பின்பற்றும் மாணவன் ஒருவன் அதில் 3 பாடங்களைத் தொடர்கின்றார். அவர் தொடர்கின்ற பாடங்களில் A யும் B யும் கட்டாய பாடங்களாகும். அதனுடன் தெரிவுப் பாடங்களான P மற்றும் Q விலிருந்து யாதாயினுமோர் பாடத்தினையும் அம்மாணவன் தெரிவு செய்தல் வேண்டும். இதனைக் குறித்து நிற்கும் சரியான **பூலியன் கோவை** யாதாகும்?

(1) (P AND B) AND (A OR Q)
(2) (A OR B) AND (P AND Q)
(3) (A AND B) AND (P OR Q)
(4) (A AND B) OR (P OR Q)

17. அருகிலுள்ள சுற்றில் முனைகள்(Pins) 1,2, மற்றும் 3 தொடர்பில் **பிழையான** கூற்று யாதாகும்?




(1) 2, 3 இன் நிலை 0 ஆகும் போது 1 இன் நிலை 1 ஆகும்.
(2) 2, 3 இன் நிலை 1 ஆகும் போது 1 இன் நிலை 0 ஆகும்.
(3) 2 இன் நிலை 0 ஆகவும், 3 இன் நிலை 1 ஆகவும் உள்ளபோது 1 இன் நிலை 1 ஆகும்.
(4) 2 இன் நிலை 1 ஆகவும், 3 இன் நிலை 0 ஆகவும் உள்ளபோது 1 இன் நிலை 0 ஆகும்.

18. தரவுச்சேமிப்பு அலகுகள் தொடர்பில் பின்வருவனவற்றுள் எதனை ஏற்றுக்கொள்ள **முடியாததாகும்**?

(1) நான்கு பிற்றுக்கள் ஒரு nibble என அழைக்கப்படும்.
(2) 1024 பிற்றுக்கள் ஒரு கிலோ பைற் ஆகும்.
(3) 1024 கிலோ பைற்றுக்கள் ஒரு மெகா பைற்றினை உருவாக்குகின்றன.
(4) ஒரு பைற் எட்டு பிற்றுக்களைக் கொண்டுள்ளது.

www.Paritchai.com
kalvi.lk
Scanned by CamScanner

19. DPI **குறித்து நிற்பது,**

(1) Digits Per Inch
(2) Data Per Inch
(3) Dots Per Inch
(4) DVD Per Inch

20. புளு-றே **(blue-ray)** வட்டு ஒன்றின் **கொள்ளளவு** .................. ஜிகா பைற்றுக்கள் ஆகும்.

(1) 150
(2) 10
(3) 100
(4) 200

21. பணிச்செயல் முறைமை ஒன்றின் **பிரதான பணி** பின்வருவனவற்றுள் யாதாகும்?

(1) வலைப்பக்கங்களைச் சேமித்தல்
(2) கடவுச் சொற்களை பயனர்களுக்கு வழங்கல்
(3) ஆவணங்களிலுள்ள இலக்கண வழுக்களைத் தேடல்.
(4) நினைவக முகாமைத்துவம்

22. பரிசையிடாத முறுக்கியசோடி வடங்களிலுள்ள CAT5 வட சோடிகளின் **எண்ணிக்கை** யாதாகும்?

(1) **2**
(2) 4
(3) **6**
(4) **8**

23. கணினி வலையமைப்புக்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் **சரியானவை**?

A. மையப்படுத்தப்பட்ட மென்பொருள் முகாமைத்துவத்தினைப் பயன்படுத்த முடியும்.
B. வடங்களாலேயே ஒவ்வொரு உபகரணமும் இணைக்கப்பட்டிருக்கும்.
C. வெவ்வேறு இடவியல்களைக் (Topology) கொண்டதாயிருக்கும்.

(1) A , B மட்டும்
(2) B , C மட்டும்
(3) A , C மட்டும்
(4) யாவும் சரியானவை

24. இணையத்தில் தகவல்களைத் தேடுதல் பின்வருவனவற்றுள் **எவ்வகையான** தரவு ஊடுகடத்தல் முறைக்குரியதாகும்?

(1) முழு இருவழிப்போக்கு முறை
(2) ஒற்றைமுறை
(3) அரை இருவழிப்போக்கு முறை
(4) அரை ஒற்றைமுறை

25. உற்பத்திப் பொருள் ஒன்றின் QR குறியீட்டினை எவ்வாறு பரீட்சித்தல் என்பது தொடர்பான படிமுறைகள் W தொடக்கம் Z வரை காட்டப்பட்டுள்ளன. இவற்றின் **சரியான ஒழுங்கினைத்** தருவது பின்வருவனவற்றுள் யாதாகும்?

| | | | |
|---|---|---|---|
| W | வலைத்தளத்திற்கு இணைத்தல் | Y | **decoding** |
| X | QR குறியீட்டிற்கு வழிப்படுத்தல் | Z | படமெடுத்தல் |

(1) 1-W, 2-X, 3-Y, 4-Z
(2) 1- Y, 2 - X, 3 –W , 4-Z
(3) 1- X, 2- Z, 3-Y, 4- W
(4) 1- X, 2 - Z, 3-Y, 4- W

26. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருள் ஒன்றினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஆவணம் ஒன்றினைக் களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய **குறுக்குவழிச் சாவி** யாதாகும்?

(1) Ctrl + A
(2) Ctrl + X
(3) Ctrl + C
(4) Ctrl + S

**கீழே தரப்பட்ட விரிதாள் பகுதியினைப் பயன்படுத்தி 27, 28 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

27. கலம் C1 இல் **=A$1+B1** எனும் சூத்திரம் காணப்படுகின்றது. இதனை கலம் C4 இற்கு பிரதி செய்தால் அங்கு காணப்படக்கூடிய **சூத்திரம்** பின்வருவனவற்றுள் யாதாகும்?

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | 23 | | | | |
| 2 | 57 | | | | |
| 3 | 89 | | | | |
| 4 | 64 | | | | |
| 5 | 29 | | | | |
| 6 | | | | | |

(1) =A$1+B3
(2) =$A1+B2
(3) =A$1+B1
(4) =A$1+B4



www.Paritchai.com
kalvi.lk
Scanned by CamScanner

28. கலம் C1 இல் காணப்படும் சூத்திரம் =A$1+B1 இனை =A$1-A2 ஆக மாற்றிய பின் அதனைக் கலம் C3 இற்கு பிரதி செய்யப்படும் போது அங்கு காணப்படக்கூடிய **பெறுமதி** யாதாகும்?

(1) 23 (2) - 41 (3) -66 (4) -6

29. பின்வருவனவற்றுள் எது கலம் ஒன்றினுள் தரவினை உள்நுழைப்பதற்கு **பயன்படுத்த முடியாத** முறையொன்றாகும்?

(1) Arrow key ஒன்றினை அழுத்துதல்
(2) Tab key இனை அழுத்துதல்
(3) Esc key இனை அழுத்துதல்
(4) Enter Button இனை அழுத்துதல்

30. விரிதாள் மென்பொருள் ஒன்றில் காணப்படுகின்ற சில வடிவமைப்புக் கருவிகளும் அவற்றின் பயன்பாடுகளும் ஒழுங்கின்றிய முறையில் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| A | % | i | பெறுமதி ஒன்றின் தசம தானங்களின் எண்ணிக்கையினை மாற்றல். |
| B | $ ▾ | ii | காற்புள்ளியினால் (Comma) வேறாக்கல். |
| C | , | iii | சதவீதமாக முன்வைத்தல். |
| D | ←.0 .00 .00 →.0 | iv | பணப்பெறுமதிக்கான அலகு ஒன்றினால் பிரதிநிதித்துவப்படுத்தல். |

பின்வருவனவற்றுள் எது மேலுள்ளவற்றின் **சரியான இணைப்பினைக்** காட்டுகின்றது?


(1) A-ii, B-i, C-iv, D-iii
(2) A-iii, B-iv, C-ii, D-i
(3) A-i, B-ii, C-iii, D-iv
(4) A-iv, B-iii, C-ii, D-i


Education கல்வி අධ්‍යාපන

31. $A$1 மற்றும் B1 ஆகியன முறையே ............. , ............ **முகவரிகள்** என அழைக்கப்படும்.

(2) சார்பான, முற்றுறு
(2) முற்றுறு, சார்பான
(3) கலந்த(Mixed) , முற்றுறு
(4) சார்பான, கலந்த

32. மின்னணு முன்வைப்பு ஒன்றிலுள்ள படவில்லை ஒன்றினை வடிவம் C இலிருந்து வடிவம் D இற்கு **மாற்றுவதற்கு** பின்வருவனவற்றுள் எது பயன்படுத்தப்படும்?


design C


design D

(1) சாதாரண காட்சி (Normal view)
(2) படவில்லை மாறுகை **(Slide transition)**
(3) படவில்லைத் தளக்கோலம் **(Slide Layout)**
(4) படவில்லைக் காட்சி **(Slide show)**

33. நிகழ்த்துகை ஒன்றில் புதிய படவில்லை ஒன்றினைப் புகுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய **குறுக்குவழிச்சாவி**?

(1) Ctrl + A
(2) Ctrl + M
(3) Ctrl + N
(4) Ctrl + S

34. பின்வருவனவற்றுள் எது இலத்திரனியல் நிகழ்த்துகைகள் தொடர்பில் **சரியானது**?

(1) படவில்லைக் காட்சி நிலையில் நிகழ்த்துகை ஒன்றில் அடங்கியுள்ள சகல படவில்லைகளும் சிறியதாக தென்படும்.
(2) படவில்லையிலுள்ள எவ்வாறான உருக்களுக்கும் அசைவூட்டங்களைப் பிரயோகிக்கலாம்.
(3) Apple Keynote ஆனது ஓர் இலவச மற்றும் திறந்த வள நிகழ்த்துகை மென்பொருளாகும்.
(4) ஒரு படவில்லையிலிருந்து மற்றைய படவில்லைக்கு மாறுதல் நிகழ்வது அசைவூட்டத்தின் மூலமாகும்.

www.Paritchai.com
kalvi.lk
Scanned by CamScanner

35. பின்வருவனவற்றில் எது முதலில் விரிதாள் கோப்பு நீட்சிகளையும் தொடர்ந்து தரவுத்தள கோப்பு நீட்சிகளையும் **முறையே** கொண்டுள்ளது?

(1) DOCX, XLS, MP3, MDB
(2) XLSX, XLS, MDB, ACCDB
(3) MDB, ACCDB, XLS, XLSX
(4) XSC, MDB, DOCX, XLS

36. தொடர்புநிலைத் தரவுத்தளம் ஒன்றிலுள்ள அட்டவணைகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் **சரியானது**?

(1) முதன்மைச்சாவியின்றி அட்டவணை ஒன்றினை உருவாக்க முடியாது.
(2) அட்டவணை ஒன்றின் நிரை, நிரல்களின் எண்ணிக்கை சமமாகவே காணப்படல் வேண்டும்.
(3) அந்நியச்சாவியானது இரு அட்டவணைகளுக்கிடையில் தொடர்பினை ஏற்படுத்துகின்றது.
(4) முதன்மைச்சாவி ஒன்றில் எப்போதும் பல புலங்கள் காணப்படும்.

37. நூலகம் ஒன்றில் புத்தகங்கள் தொடர்பான விபரங்களைச் சேமிப்பதற்காக உருவாக்கப்பட்ட புத்தக அட்டவணையில் பின்வரும் புலங்கள் பயன்படுத்தப்பட்டன.

| புலம் - field | தரவு - data |
|---|---|
| ISBN number | 978-014037424 |
| Name of author | Roald Dahl |
| Price of a book | $ 6.00 |
| Title of book | James and the Giant Peach |

தரப்பட்ட அட்டவணையில் உள்ள புலங்களுக்கு மிகப்பொருத்தமான தரவு வகைகளை **சரியான ஒழுங்குமுறையில்** காட்டுவது ?

(1) **Number**, Text, **Currency**, Text
(2) Text, Text, **Currency**, Text
(3) Text, Text, Text, **Currency**
(4) Text, Text, **Number**, Text

38. பின்வருவனவற்றுள் எவை ஓர் அரசினால் தனது பிரசைகளுக்கு (G2C) வழங்கப்படுகின்ற **நிகழ்நிலைச் (online) சேவைகளைக்** குறிப்பிடுகின்றன?

a. அரச பணக்கொடுப்பனவுச் சேவைகள்
b. அரச நிறுவனங்களின் பெயர்ப்பட்டியல்
c. சுற்றுநிருபங்கள்

(1) A யும் B யும் மட்டும்
(2) B யும் C யும் மட்டும்
(3) A யும் C யும் மட்டும்
(4) A, B, C ஆகிய யாவும்

39. **CAT** பொறி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் எது **சரியற்றதாகும்**?

(1) X- கதிர்ப்படங்களை விட அதிக தகவல்களை இவை வழங்குகின்றன.
(2) இது உடலினுள் பலவிதமான கதிர்களை வெவ்வேறு கோணங்களில் செலுத்துகின்றது.
(3) இது மிகவும் விரைவானதும் செம்மையானதுமான நோய்கண்டறி முறையாகிய போதிலும் வலிமிக்க முறையாகும்.
(4) இது உடலின் உட்பாகங்களை வெவ்வேறாக முப்பரிமாண முறைப்படி படமெடுக்கின்றது.

40. நிகழ்நிலை (Online) தொலைக் கல்வி முறையின் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

K. நிகழ்நிலை ஒப்படைகளையும் புதிர்களையும் ( Quizzes) வழங்குகின்றது.
L. தினசரி நேரசூசி ஒன்றிற்கமைவாக கற்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.
M. மாணவர்கள் குறிப்பிட்ட கற்கை நிலையத்திற்கு வருகைதந்தே கற்க வேண்டும்.
N. நிகழ்நிலை மூலமாக ஆசிரியர் ஒருவருடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள முடியுமாயிருத்தல்.

நிகழ்நிலை தொலைக் கல்வி தொடர்பான மேலுள்ள இயல்புகளில் **பொருத்தமற்றவை** யாவை?

(1) K யும் L உம் மட்டும்
(2) L உம் M உம் மட்டும்
(3) K யும் M உம் மட்டும்
(4) K யும் N உம் மட்டும்

* * *

www.Paritchai.com
Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk
Scanned by CamScanner

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்தவொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page